## மரபு ரீதியாக இருந்து வரும் எமது உரிமைகளை மையமாகக் கொண்டு நல்லிணக்கத்தை அடைவதற்கான கிராம மக்கள் ஒன்றியமொன்றை உருவாக்குதல்.

**அறிமுகம்**

மூன்று தசாப்த கால யுத்தத்தின் பின்பு இன்று இலங்கை குறிப்பிடத்தக்க ஒரு கட்டத்தை அடைந்துள்ளது. மோதலுக்கு அடிப்படையாகிய காரணங்களுக்குத் தீர்வு தேடி, அதனூடே நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவதோடு இந்த நாட்டிற்கேயுரிய விலங்கினங்கள், தாவரங்கள் மற்றும் இயற்கை வளங்களை முறையாகப் பாதுகாத்து, நவீன உலகின் போட்டித் தன்மை மற்றும் எமது தாய் நாட்டின் புவியியல், அரசியல் நிலைமைகளை அடையாளங்கண்டு, தீவிரமானதும் சமநிலைத் தன்மையானதும் உறுதியானதுமான அபிவிருத்தியை நோக்கி நாட்டை இட்டுச்செல்ல வேண்டியுள்ளது.

**முகவுரை**

எந்தவொரு காலகட்டத்திலும் எந்தவொரு சமூக நிலைப்பாட்டிலும் பெண்ணாகப்பட்டவள் தனிமையாக்கப்படாத வலுவுள்ள நபராவாள். நவீன பெண்ணுக்கு சர்வதேச ஒப்பந்தங்கள், சட்டதிட்டங்கள் மூலமாக பாதுகாப்புக்கான வழிமுறைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

மனிதாபிமான பண்புகளுடன் கூடியதாக, தனிமைப்படாமல் மனிதனை பூரண மனிதனாக்குவதற்கான உச்ச வலு, சக்தி மற்றும் ஒழுக்கம் என்பன அவளிடமுள்ளன. அவற்றை தேசிய, சர்வமத, மரபு ரீதியான அபிலாசைகளினூடே வெளிக்கொணர வேண்டும்.

இதற்காக நாம் பிரஜைகள் என்ற வகையில் ஒரு நல்ல நாட்டையும், திறமைகளையும் மனப்பாங்குகளையும் முன்னெடுத்து மனிதத்துவம் மிக்க ஒரு நாடாக இதை பரிணமிக்கச் செய்வது எம் கடமையாகும். அதை நோக்கி..

1. பாரம்பரியமாக எமக்கிருக்கும் அனுபவங்கள், மரபுகள் மற்றும் விழுமியங்களினூடே எமது அடிப்படை உரிமைகளைப் பாதுகாத்திட வேண்டும்.
2. சமூக, பொருளாதார அபிவிருத்தியை கலாச்சார விழுமியங்களைப் பாதுகாப்பதினூடே அடையப் பெறச் செய்ய வேண்டும்.
3. அரசியற் செயற்பாடுகளைச் சமமாகவும், நியாயமாகவும் வழிநடாத்த வேண்டும்.

நாம் அனைவரும் அனுபவிக்கக்கூடிய அபிவிருத்தியடைந்த ஒரு சமூகத்தை உருவாக்கல்.

**குறிக்கோள்**

மரபு ரீதியாக இருந்துவரும் எமது உரிமைகளை அடிப்படையாகக் கொண்டு நல்லிணக்கத்தை அடைவதற்காக கிராம மக்களின் ஒன்றியமொன்றை உருவாக்குதல்.

**பாடநெறியின் உள்ளடக்கம்:**

1. பெண்கள் உரிமைகளைப் பாதுகாத்தல். சர்வதேச மற்றும் தேசிய ரீதியில் கற்றுக் கொண்டவை
2. மனித உரிமை செயற்பாட்டாளர்கள் மக்கள் மத்தியில் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்காக செய்ய வேண்டிய கடமைகள்
3. யுத்த காலத்தின் பின்பு நல்லிணக்கத்தை உருவாக்குவதற்கான மனித உரிமைகள் ஊடான அணுகுமுறை.

4. பெண்கள் உரிமைகளை பாதுகாத்தல், வழிகாட்டல் - CEDAW (பெண்களுக்கெதிரான எல்லாவிதமான பாரபட்சங்களையும் ஒழிப்பதற்கான ஐக்கிய நாடுகள் உடன்படிக்கை)
5. ஐ.நா. பாதுகாப்புச் சபையின் முன்மொழிவுகள். 1325 மற்றும் 1820 பெண்கள் சமாதானம் மற்றும் பாதுகாப்பு

**பயிற்றுவிப்பாளர்களுக்கான ஆலோசனைகள்**

பெண்கள், சமாதானம், பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி தழுவிய விடயம் குறித்து உரிய நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு முன்வரும் அனைவரும் முதலில் கைந்நூலை முழுமையாக வாசித்து அடிப்படை விளக்கத்தை பெற்றுக்கொள்ள வேண்டும். விடயம் பற்றிய பல்வேறு கைந்நூல்களை வாசித்து விரிவான விளக்கத்தைப் பெற்றுக் கொள்ளல் இங்கு பயன்மிக்கது.

**பயிற்சிக்குத் தயாராகுதல்**

- பயிற்சி ஒரு நாள் முழுதும் நடைபெறுவதோடு, அதற்கான வசதியான இடமொன்றைத் தெரிவு செய்ய வேண்டும். தேவைப்படின் சிலருக்கு வதிவிடவசதிகள் தரப்படுவது மிக நல்லது.

- பயிற்சிக்குத் தேவையான துண்டுப் பிரசுரங்கள், நிகழ்ச்சி நிரல், பயிற்சிக்கான துணைக்கருவிகள், எழுது பொருட்கள் என்பவற்றை தயார் செய்துகொள்ள வேண்டும்.

- நிகழ்ச்சித்திட்டத்திற்கான செலவு மதிப்பீடொன்றை தயாரிப்பதன் மூலம் குறைகளின்றி அதனை நடாத்த முடியும். (இணைப்பு இல. 01)

- பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தின் அமர்வுகள் கிரமமாக தொடரும் வகையில் பயிற்சித் திட்டத்தை ஒழுங்கமைக்க வேண்டும். அப்போது ஒவ்வொரு அமர்வுக்குமிடையில் சிறந்த தொடர்பை ஏற்படுத்தலாம்.
(மாதிரி அமர்வு கிரமம் மற்றும் உள்ளடக்கம் இணைப்பு இல. 02)

- தலைப்புக்குரியனவற்றை மட்டும் கலந்துரையாட வேண்டும். இங்கு முன் ஆயத்தம் மிக முக்கியமாகும். பொறுமையுடன் செவிமடுக்கவும்.

**பயிற்சி முறைமைகள்**

பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் அநேகமாக பங்கேற்பு முறையிலானதாக அமைதல் வேண்டும். அமர்வுகளில் பங்குபற்றுவோரை ஊக்குவிக்கும் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். கலந்துரையாடல்கள், பயிற்சிகள், சமர்ப்பணங்கள் என்பன கலந்ததாக பங்குபற்றுவோரை நிகழ்ச்சியில் ஈடுபடுத்தும் வழிமுறைகளை பயிற்சிக் குழு கையாள வேண்டும்.

- ❖ பயிற்றுவிப்பாளர் மற்றும் பங்குபற்றுவோருக்கிடையில் நம்பிக்கை நிலவ வேண்டும். அதன் மூலம் அவர் நேரடித் தன்மையை பேணுவார். (அதாவது தலைப்பு பற்றிய அறிவுடைமை தெரியாதவற்றை ஏற்றுக்கொள்ளல் மற்றும் அவை பற்றி தேடி அறிவித்தல் என்பன நேர்மையான ஒருவரின் பண்புகளாகும்.

- ❖ நிகழ்ச்சிநிரலை தன்வயம் வைத்திருத்தல் வேண்டும். ஆனால் அதுபற்றிய ஞாபகமிருத்தல் அவசியம். வினாக்களைத் தொடுப்பதன் மூலம் இந்நிகழ்ச்சியை

மற்மொரு பரிமாணத்திற்கு எடுத்துச் செல்லலாம். நாம் கேட்போரின், கேள்வி கேட்கும் உரிமையை பேண வேண்டும். அதன் மூலம் கேட்போனை ஊக்கப்படுத்த முடியும். (தேவையற்ற விதத்தில் செயற்பாடுகள் செய்ய முடியாது)

- ❖ எப்பொழுதும் எதிர்பாராத சந்தர்ப்பங்களில் நம்மை பங்குபற்றுவோர் கஷ்டத்திற்குள்ளாக்கலாம் என்ற நினைவோடு தயாராக இருக்கவும்.
  - இதுபோன்ற நிலைமைகளில் ஏனைய பங்குபற்றுவோரின் உதவியைப் பெற்றுக் கொள்ள முடியும்.
  - பயிற்றுவிப்பாளரின் நிலைப்பாடு மற்றும் குறிக்கோள்கள் தொடக்கத்திலிருந்து இறுதிவரை பேணப்பட வேண்டும்.
  - நாம் நல்லிணக்கம் மற்றும் மனித உரிமைகள் பற்றி பேசும் போது எமக்குப் பொருத்தமற்ற பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டி ஏற்படலாம்.
  - நாம் ஒரு நிலைப்பாட்டில் இருக்க வேண்டும். பின்னடைவைத் தவிர்ப்பதற்காக அவதானத்தை நிலையாக வைத்துக் கொள்ள வேண்டும்.
  - சிலே வேளை கேட்போர் மறுப்புக் கூறலாம். அவ்வாறான சந்தர்ப்பங்களில் மௌனமாக இருக்க வேண்டும். (அதை நிறுத்த உம்மால் முடியும். ஆனால் அவ்வாறு செய்வது கேட்போரை குறை கூறுவதற்கன்றி சிந்திக்க வைப்பதற்காகும்)

**செவிப்புல கட்புல சாதனப் பிரயோகம்**

நிகழ்ச்சியில் வரைபடங்கள் மற்றும் உருவங்களை முன்கூட்டியே தயாரித்து வைத்துக் கொள்ள வேண்டும்.

**அமர்வு 01**

தினத்துக்குரிய குறிக்கோளும் அணுகுமுறையும்

நேரம் : 30 நிமிடங்கள்

பயிற்சி முறைமை
தனிநபர் செயற்பாடு

**பயிற்சி வழிகாட்டல்**

- பங்குபற்றுவோர் தம்மைத்தாம் அறிமுகப்படுத்துவதன் மூலம் சபைக்கூச்சத்தை ஒழிப்பதற்காக உரிய செயற்பாடுகளைச் செயதல். (தேவையான பொருட்கள் மற்றும் செயற்பாடுகளை தயார் செய்தல் வேண்டும்)
- பங்குபற்றுவோர் மற்றும் விரிவுரையாளர்களுக்கிடையில் பதற்றம் காணப்பட்டால், அதை நிறுத்துவதற்கும் அதைத் தணிப்பதற்கும் வழியமைத்துக் கொடுத்தல். இதன் மூலம் கருத்துப்பரிமாற்றம் செய்யலாம்.

**குறிக்கோள்கள்**

- பாடநெறியில் பங்குபற்றுவதற்கான குறிக்கோள்களை அடையாளம் காண்பது அடுத்து செய்யப்பட வேண்டும். தயாரித்துக் கொண்ட மென்அட்டை (Soft card) மற்றும் பேனா ஒன்றை பங்குபற்றுவோருக்கு பெற்றுக் கொடுக்கவும். இந்த பாடநெறியில் பங்குபற்றுவதன் குறிக்கோள் என்ன என்பதை அட்டையில் எழுதுவதற்கு ஆலோசனை வழங்கவும். இதற்காக 5 நிமிடங்கள் கொடுக்கவும். அதை சுவரில் ஒட்டி காட்சிப்படுத்தவும்.

- பாடநெறியின் இறுதியில் இக்குறிக்கோள் அடையப்பெற்றதா என்பதை பங்குபற்றுவோரிடம் கேட்டறிதல் வேண்டும்.
- அடுத்து பயிற்சி வேலைத்திட்டம் பற்றிய குறிக்கோள் அட்டைகளை காட்சிப்படுத்தி அவற்றை விளக்கவும்.
- இந்நிகழ்ச்சித் திட்டம் நடக்கும்பொழுது பின்பற்றப்படவேண்டிய முறைமைகளும் பங்கேற்புப் பயிற்சி முறையும் செயற்படுத்தப்படுமாற்றை விளக்கவும்.

**அமர்வு 02**

**பெண்கள் உரிமைகள்**

நேரம் : 1.45 நிமிடங்கள்
தேவையான பொருட்கள் : வைட் போர்ட், மார்கர் பேனா, பிலிப் சார்ட், பிலட்டிக்னம், கத்தறிக்கோல், கொளுக்கி

**பயிற்சி முறைமை : குழுப்பயிற்சி செயற்பாடுகள், படக்காட்சிகள்**

**பயிற்சிக்கான வழிகாட்டல்**

தனிநபர் செயற்பாடொன்றை சமர்ப்பிப்பதன் மூலம் அவர்களுக்கு பதில் கூறும் திறனை ஏற்படுத்தலாம். அவர்களின் விடைகளை அவர்களுக்கு வழங்கியுள்ள அட்டையில் எழுதி அதை பலகையொன்றில் பொறித்தல்.

1. பெண் என்பவள் யார்?
2. பெண்கள் உரிமைகள் யாவை?

பங்கேற்போருடன் இது தொடர்பில் ஒரு நேரத்தை நியமித்து கருத்துப் பரிமாறுதல். (ஒரு வினாவுக்கு 10 நிமிடங்கள், பேனா வழங்கவும்)

- நாம் பெண்கள் உரிமை பற்றி பேசுவது யாருடன் என்பதை தெரிந்திருக்க வேண்டியதோடு, பேசுபொருள் பற்றி சுருக்க அறிமுகம் செய்யப்படல் வேண்டும்.
- பின்வரும் விடயங்களை பங்குபற்றுவோருக்கு விளக்க வேண்டும்.

  - பெண்கள் உரிமைகள் என்பதன் கருத்தாவது, பெண்களுக்கு ஆண்களோடு சமஇடம் கிடைத்துள்ளதா என்பதும், அதன் மூலம் அவர்கள் அவர்களினதும் ஆண்களினதும் இயலளவு சமமாக இருக்கிறதா என்று பார்ப்பதுமாகும்.
  - சில சந்தர்ப்பங்களில் பெண்கள் உரிமைகளோடு அவர்களது பாதுகாப்பும் உட்படும். பிரசவ விடுமுறை அல்லது பெண்களுக்கு இடைஞ்சல்கள் ஏற்படும் சந்தர்ப்பங்கள். (வஞ்சக்கடத்தல், வல்லுறவு)
  - பெண்கள் உரிமைகளாவன காலம் மற்றும் கலாச்சாரத்தின் அடிப்படையில் மாறியுள்ளன.
  - இன்றும் பெண்கள் உரிமைகள் என்ன என்பது பற்றி பல்வேறு கருத்துக்கள் உண்டு.
  - பெண்கள் உரிமைகள் மனித உரிமைகளாகும்.

- சர்வதேச மட்டத்தில் உள்ள முக்கிய உடன்படிக்கைகள் மற்றும் முன்மொழிவுகள் பற்றி சுருக்கமாக விளக்கவும்

- பெண்களுக்கு எதிரான எல்லா வகை பாரபட்சங்களையும் ஒழிப்பது பற்றிய ஐக்கிய நாடுகள் உடன்படிக்கை (CEDAW)

(சீடோ உடன்படிக்கையின் பின்னணி மற்றும் அடிப்படை விடயங்கள் பற்றிய அறிமுகம் செய்யப்பட வேண்டும். தொடர்ச்சியாக நிலவுகின்ற அசமத்துவம் பற்றிய தரவுகள், வித்தியாசமான உடன்படிக்கை ஒன்று தேவையாவதற்கான காரணம், சீடோ உடன்படிக்கையின் வரலாறு மற்றும் பரவல், சீடோ கமிட்டி மேலதிக வரைபுகள் மற்றும் சீடோ கோட்பாடுகள் : சமத்துவம் பற்றிய கோட்பாடுகளை சமமான அளவில் கணிக்கும் கோட்பாடு, அங்கத்துவ நாடுகளின் பொறுப்புக் கோட்பாடு மற்றும் சீடோ சரத்துக்களை சுருக்கமாக விளக்க வேண்டும்.

- ஐ.நா பாதுகாப்புச் சபையின் முன்மொழிவுகள் 1325

○ பெண்கள் உரிமைகளில் உள்ளடங்குவன யாவை? விடயங்களை தொகுக்கவும். சிவில் உரிமைகள், பொருளாதார உரிமைகள், விவாக, விவாகரத்து மற்றும் பெற்றோர் உரிமைகள். அத்துடன் அடிப்படை சிவில் உரிமை.
○ பெண்கள் உரிமைகள் மற்றும் பிரச்சினைகள் பற்றி கலந்துரையாடவும்
○ இலங்கையில் பெண்கள் உரிமைகள்
○ பின்வரும், இலங்கையில் தற்போது நடைமுறையில் இருக்கும் சட்டங்கள் மற்றும் கொள்கைகள் பற்றி அறிமுகம் செய்யவும்.

✓ 1978 அரசியல் யாப்பு
✓ சீடோ உடன்படிக்கை
✓ பெண்கள் சாசனம்
✓ வீட்டு வன்முறை ஒழிக்கும் சட்டம்
✓ சிறுவர் மற்றும் இள வயதினர் கட்டளைச் சட்டம் Children and Young Persons Ordinance (CYPO)
✓ Child Rights Conventions (CRC) சிறுவர் உரிமை மாநாடுகள்
✓ ஐ.நா பாதுகாப்புச் சபை முன்மொழிவுகள் 1325
✓ தன்னிச்சைப் போக்குச் சட்டம்
✓ திருமணச் சட்டம்
✓ Pre School and Early Childhood and Development (ECCD) 2012 முன்பள்ளி மற்றும் ஆரம்ப பிள்ளைப் பருவ பாதுகாப்பும் அபிவிருத்தியும் 2012
✓ தண்டனைச் சட்டக் கோவை
✓ ஏனைய தொழிற் சட்டங்கள்

இந்த சட்டங்கள் மற்றும் கொள்கைகளில் காணப்படும் குறைபாடுகள் யாவை? எவ்வாறு முறையாக செயற்படுத்தப்பட வேண்டும். கருத்துக்கள் மற்றும் முன்மொழிவுகளை கேட்க.

○ அமர்வின் இறுதியில் வீடியோ காட்சிகளை (மீனவின் காட்ர்டூன்) காட்டி, அதற்கு சமாந்தரமாக ஒரு கலந்துரையாடலை ஆரம்பித்து அமர்வின் விடயங்களை தொகுத்து நிறைவு செய்க.

## அமர்வு 03

**மனித உரிமைகள்**

நேரம் : 1 மணி 45 நிமிடம்

தேவையான பொருட்கள் : வைட் போர்ட், மார்கர் பேனா, பிலிப் சார்ட், பிலட்டிக்னம், கத்தறிக்கோல், கொளுக்கி

**பயிற்சி வழிகாட்டல்**

- மனித உரிமைகள் பற்றிய கோட்பாடு மற்றும் பரவலை விளக்கவும்.

பின்வரும் மனித உரிமைகள் பற்றி காணப்படும் உடன்படிக்கைகள், பிறகடனங்கள் பற்றி விளக்குதல்.

**சர்வதேச மட்டத்தில்**

- மனித உரிமைகள் பற்றிய உலகப் பிரகடனம் மற்றும் மூன்றாம் உறுப்புரை
- சீடோ சாசனம்
- சிறுவர் உரிமைகள் யாப்பு
- ஐ.நாவின் மனித உரிமைகள் பாதுகாப்பு மற்றும் அது தொடர்பான சிறப்பு நிறுவனங்கள்.

**தேசிய மட்டத்தில்**

- இலங்கை கைச்சாத்திட்டிருக்கும் மனித உரிமைகள் சாசனத்தை விளக்க வேண்டும். அதில் இலங்கை சில சாசனங்களில் கைச்சாட்த்திட்டுள்ளதால் அவற்றைப் பாதுகாப்பதற்கும் இலங்கை அரசுக்கு பொறுப்புண்டு என்பது பற்றி பங்குபற்றுவோருக்கு விளக்க வேண்டும்.
- தேசிய மனித உரிமைகள் சட்டங்கள் மற்றும் நிறுவனங்கள் பற்றி அறிவை வழங்க வேண்டும்.
  - அடிப்படை உரிமைகள் மற்றும் மனித உரிமைகள் என்பவற்றுக்கிடையிலான வித்தியாசத்தை விளக்க வேண்டும்.
  - அடிப்படை உரிமைகள் மீறப்பட்ட சந்தர்ப்பங்களில் நிவாரணம் பெற்றுக்கொள்வது எவ்வாறு. அடிப்படை உரிமைகள் தொடர்பில் வரையறைகள் என்ன என்பன பற்றி மக்களை விழிப்பூட்டல்.

ஒன்றுக்கொன்று வித்தியாசமான கதைகள் மற்றும் மனித உரிமைகள் ஊடே அணுகுதல்.

யுத்தத்திற்கு பிற்பட்ட காலத்தை பற்றிப் பேசும் பொழுது இலங்கை இயல்பு நிலையை அடையவில்லை என்பதையும், யுத்தத்திற்கு காரணமாகிய விடயங்களை விளங்கவில்லை என்பதையும் பற்றி பங்குபற்றுவோரை ஏற்கச்செய்ய வேண்டும். தொடர்ந்தும் நாம் மறைவான யுத்தமொன்றுக்கு முகம்கொடுத்துள்ளோம். அதாவது யுத்தத்திற்கு பிற்பட்ட காலத்திலும் ஒரு மோதல் நிலவுகிறது.



- பல்வேறு கதைகள் இருப்பின் மோதல் நிலைமையும் நிலவலாம். (ஆயுதங்கள் மௌனம் சாதித்தாலும்)
- ஒரு கதை அமிழ்ந்திருப்பினும் அடுத்த கதை மக்கள் மத்தியில் தொடர்ந்தும் காணப்படுகிறது.
- நல்லிணக்கம் - ஒன்றுக்கொன்று வித்தியாசமான இரு கதைகளை ஏற்று ஒரு கதையாகத் தொகுத்தல்.




- மனித உரிமைகள் அணுகுமுறையைப் பயன்படுத்துகையில் பின்வரும் விடயங்களை கவனத்தில் கொள்க.
  - ✓ சில சந்தர்ப்பங்களில் குறிப்பிட்ட ஒரு கதையை உருவாக்குவதற்கு இயலாமல் போகலாம். ஆனால் செவிசாய்த்து நல்லிணக்கத்தை ஏற்படுத்த முயலவேண்டும்.
  - ✓ நாம் ஒரு செயன்முறையை பின்பற்ற வேண்டும். செயன்முறையின் இடையிலே பங்குபற்றுவோர் விளங்கிக்கொள்ள வாய்ப்புண்டு.
  - ✓ இடையீடு முக்கியமெனினும் இலங்கையில் இது வரையறுக்கப்பட்ட ஒன்றாகும்.
  - ✓ தென்படாத உரிமைகள் தோற்றலாம்.

- ஒரு மோதலில் மக்கள் ஒரு பக்கத்தை மட்டும் காணலாம். திருத்தியமைக்கப்பட்ட பகுதி, ஊடகங்களில் வெளியிடப்படும் காட்சிகளைக் கண்ட பின்பு திடீர் தீர்மானங்களுக்கு வருவர். இங்கு அக்காட்சிகள் பற்றி கருத்துக்கூறும் பக்கச் சார்புத் தன்மையை கண்டுகொள்ளலாம்.

**செயற்பாடு**
வாரியப்பொல சம்பவம் (பெண் பிள்ளை மக்கள் மத்தியில் ஆண் பிள்ளையை தாக்குதல்) அல்லது வேறும் எந்தவொரு மோதல் சம்பவத்தை உதாரணமாக எடுத்து,

- ✓ அத்தரப்புக்களை நல்லிணக்கம் நோக்கி கொண்டு செல்ல முடியுமாகுமா / வேண்டுமா?
- ✓ எதிர்பார்க்கப்படும் விளைவுகள் என்ன?
- ✓ கையாளக்கூடிய விடயங்கள் யாவை?

பங்குபற்றுவோரை 3, 4 குழுக்களாக பிரித்து 30 நிமிடங்கள் கலந்துரையாடவும் சமர்ப்பிக்க ஆவன செய்யவும்.

## அமர்வு 05

**பெண், சமாதானம், பாதுகாப்புத் தொடர்பில் ஐ.நா பாதுகாப்புச் சபை 1325 முன்மொழிவுகள்**
நேரம் : 1 மணி 45 நிமிடம்

பயிற்சித் துணைகள் : பிலிப் சார்ட், Zoop card, வைட் போர்ட், வைட் மார்கஸ், கையேடுகள்.

**பயிற்சி முறைமை**

கலந்துரையாடல்கள் / விரிவுரைகள் / குழுப் பயிற்சிகள்

**பயிற்சி வழிகாட்டல்**

- ஐ.நா பாதுகாப்புச் சபை, அவற்றின் நோக்கங்களும் குறிக்கோள்களும் மற்றும் சேவைகள் பற்றி முன் செய்யப்பட்ட அறிமுகத்தை நினைவூட்டுக.

- இது மேற்கத்திய நாடுகளின் மனப்பாங்கு அல்ல. மாறாக ஆசிய நாடுகளிலிருந்து இது பற்றிய முதல் கருத்து முன்வைக்கப்பட்டுள்ள விதத்தை விளக்கவும். சர்வதேச உதாரணங்களை எடுத்துக்காட்டவும். ஆயுத மோதல் நிலவும் பொழுது உலகின் எல்லா இடங்களிலும் குறிப்பாக பெண்கள் பாதுகாப்புத் தொடர்பில் பிரச்சினைகள் தலைதூக்கியுள்ளதோடு சில நாடுகளில் கடினமான துன்புறுத்தல்களுக்கு ஆளாக்கும் ஆயுதமாக அவர்கள் பாவிக்கப்படுகிறார் என்பதை குறிப்பிட முடியும்.

- இதனாலேதான் பெண்களின் பாதுகாப்பை நிறுவவும் மோதல் தீர்த்தலில் அவர்களின் சிறப்புத் தகுதிகளை பயன்படுத்திய விதத்தையும் சர்வதேச உதாரணங்கள் மூலமாக எடுத்துக் காட்டுக.

- தேசிய ரீதியில் இலங்கையின் சமாதானச் செயன்முறையில் பெண்களின் சிறப்புப் பங்களிப்பை குறிப்பிடுக. உதாரணம் பெண்கள் / பால்நிலை உப குழு (Gender Sub committee)

- 1325 முன்மொழிவுகளில் முக்கிய 4 தூண்கள் உண்டு.
  1. சமாதான செயன்முறைகளிலும் வேறு சந்தர்ப்பங்களிலும் குறிப்பாக தீர்மானம் எடுக்கும் மட்டங்களில் பெண்களின் பங்கேற்பு
  2. சமாதான உருவாக்கம் மற்றும் பயிற்சியில் பெண்கள் தேவைகள் தொடர்பில் உணர்வூட்டம் பெறல்.
  3. பெண்கள் பாதுகாப்பை நிலைநிறுத்தல்.
  4. ஐ.நாவின் அறிக்கையிடுதலில் பெண்கள் குழுக்களின் கருத்துக்களை உள்வாங்கல்.

மேற்படி விடயங்களின் நோக்கம் மற்றும் குறிக்கோள்களை விசேடமாகக் கொண்டு கலந்துரையாடல் செய்க.

பங்குபற்றுவோரை 4 குழுக்களாகப் பிரிக்கவும்.

1. பங்கேற்பு
2. தவிர்ப்பு
3. பாதுகாப்பு
4. மீளுருவாக்கம் மற்றும் மீளிணக்கம்

ஐ.நா பாதுகாப்புச் சபையின் 1325 முன்மொழிவுகள் இலங்கைச் சமூகத்தில் எந்தளவுக்கு நடைமுறைப்படுத்தப்படுகிறது என்பதை குறித்துக் காட்டுவதற்கு 4 குழுக்களுக்கு வெவ்வேறான தலைப்புகள் ஒப்படைக்கவும்.

- நேரம் 15 நிமிடம்
- சமர்ப்பணத்திற்கு குழுவிற்கு 3 நிமிடங்கள்

- 2வது அமர்வில் அந்நான்கு தலைப்புகளிலும் தரப்பட்ட விடைகள் மற்றும் இவ்வர்ம்வில் தரப்பட்ட விடயங்களை ஒப்பிட்டு ஓர் எளிமையான ஆய்வைச் செய்க.
- இவ்வமர்வில் பின்வரும் விடயங்களை கலந்துரையாடவும்

  - அரசியல் யாப்பில் 12 (4) உடன் 1325 பொருந்துதல்.
  - இலங்கையில் 1325 முன்மொழிவுகளை எவ்வாறு சட்டமாக்கலாம்?
  - உரிய பிரதேசத்தின் அடிப்படையில் யுத்த பிற்பட்ட நிலைமைகள் பற்றி 1325 முன்மொழிவுகள் பொருந்துதல்.
  - 1325 முன்மொழிவுகளின் பயன்கள் மக்களுக்கென எடுத்துக்காட்டி அதுதொடர்பில் அவர்கள் பலப்பட வேண்டிய தேவையை எடுத்துக்காட்டல்.

பங்கேற்போரின் பிரச்சினைகளை கலந்துரையாடி உங்கள் குறிக்கோளுக்கு ஏற்ப ஒட்டுமொத்த அமர்வில் முன்வைக்கப்பட்ட விடயங்களைத் தொகுக்கவும். இங்கு, ''பருத்தித் துறையில் இருந்து தெவிந்துரை வரை தங்காபரணங்கள் அணிந்த ஒரு பெண் பயணித்தல்.'' எனும் கூற்றை 1325 வகிக்கும் பெண் சமாதானம் மற்றும் பாதுகாப்பு என்பவற்றோடு பொருத்தி அவ்வாறான சுபீட்சமான இலங்கையை நோக்கி இட்டுச் செல்லும் முயற்சியாகும் எனக் குறிப்பிடவும்.

இவ்வணைத்தையும் 1325 முன்மொழிவுகளில் உள்ளடங்கியும் இணைந்தும் உள்ளமை பற்றி பயிலுனர்கள் விளக்கம் பெற வேண்டும்.

**கைந்நூல் மதிப்பீடும் நிறைவும்.**

தின வேலைத் திட்ட மாதிரி

- 9.00 a.m – ஆரம்பமும் வரவேற்பும்
- 9.00 a.m to 9.30 a.m - அமர்வு 01 – குறிக்கோள் விளக்கமும் அறிமுகமும்.
- 9.30 to 11.15 - அமர்வு 02 – பெண்கள் உரிமைகள்
- 11.15 a.m 11.30 p.m – தேநீர் இடைவேளை
- 11.30 a.m 01.15 p.m – அமர்வு 03 – மனித உரிமைகள்
- 1.15 p.m to 1.45 p.m – மதிய உணவு
- 1.45 p.m to 3.30 p.m – அமர்வு 04 – ஐ.நா முன்மொழிவுகள் 1325
- 3.30 p.m to 3.45 p.m – மதிப்பீடு, தேநீர், நிகழ்ச்சி நிறைவு
- 3.45 p.m to 4.00 p.m – Tea